மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு. M. ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., LLM.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
2025– ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19–ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இடைக்கால மனுஎண்.09/2025 ல் அசல் வழக்கு எண்.10/2022

**CNR.No. TNTT-08000007-2022**

1.சரஸ்வதி(இறப்பு)
2.குணசேகர்
3.குணசுந்தரி
4.சொர்ணமல்லிகா
5.ஹரீஷ்கேசவன் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

ஜீவமணி தங்கரசி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.த.அரிகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.ராகவன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் செய்து கொண்ட வாத உரைகளை கேட்டறிந்தும், மனு சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று (19.12.2025)இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும் ...

**உத்தரவு**

அசல் வழக்குரையை திருத்தம் செய்யக் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனு சுருக்கம்:**

அ) தாவா சொத்தினைப் பொறுத்து மனுதாரர்கள் விளம்புகைப் பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணத்தின் படி தாவா சொத்து 8 1/2 செண்ட் கிரையம் வாங்கப்பட்டது. தற்பொழுது நில அளவு செய்து பார்க்கும்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.12.19 17:28:20 +0530

பொழுது 8 செண்டு மட்டுமே உள்ளது. எனவே, தாவா சொத்தில் 8 செண்டினை பொறுத்து பரிகாரம் கிடைத்தால் போதுமானமாகும்.

ஆ) ஆகவே, வழக்குரை 6ம் பத்திக்கு அடுத்து பத்தி (6a) கிரைய ஆவணப்படி தபசில் சொத்து 8 ½ செண்டு ஆக இருந்த போதும் தற்பொழுது 8 செண்ட் மட்டுமே உள்ளதால் 8 செண்டினை பொறுத்து பரிகாரம் கோரப்படுகிறது என்றும் தாவா சொத்தின் இறுதி வரியில் 8 ½ செண்டு என்பதினை நீக்கிவிட்டு செண்டு 8, தென்வடல் மேல்தலை 82 அடி கீழ்தலை 77 ½ அடி, கிழமேல் வடதலை 44 ½ அடி, தென்தலை 43 அடி மொத்த சதுரடி 3489 இவை தற்போது புல எண்.30/2D2, 30/2E, 30/2F இவைகளுக்கு உட்பட்டு அமைந்துள்ளது என்று சீர்திருத்தம் செய்ய வேண்டும். இல்லாவிடில், மனுதாரர்களுக்கு பெரிதும் கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே, மேற்படி சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.எதிருரை சுருக்கம்:**

மனு சங்கதிகள் மறுக்கப்பட்டு அவை உண்மையல்ல என்று சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர்கள் சீர்திருத்த விபரத்தில் தென்வடல் மேல்தலை 82 அடி என்றும், கீழ்தலை 77 ½ என்றும் அடி, கிழமேல் வடதலை 44 ½ அடி என்றும், தென்தலை 43 அடி என்றும் எந்த ஆவணத்தின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளார் என்று மனு உறுதிக் கூற்றில் குறிப்பிடப்படவில்லை. தாவா சொத்தின் தற்போததைய புல எண்கள்.30/2D2, 30/2E, 30/2F என்று எந்த அடிப்படையில் சீர்திருத்தம் செய்யக் கேட்டுள்ளார் என்று மனு உறுதிக் கூற்றில் குறிப்பிடப்படவில்லை. மேற்படி புல எண்கள் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டதாகும். வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**5.தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை**

அசல் வழக்குரையை திருத்தம் செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மானு அனுமதிக்கப்பட வேண்டுமா? அல்லது இல்லையா? என்பது தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையாகும்.


HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.12.19 17:28:25 +0530

**தீர்வு**

6. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள். எதிர்மனுதாரர் பிரதிவாதி ஆவார். தாவா வழக்கானது ஏரல் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.30/2ல் செண்ட் 50ல் மத்தியில் அமைந்துள்ள 8.5 செண்ட் சொத்தினைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரமும், தபசில் சொத்திற்கு செல்கின்ற கிழமேல் பாதையில் தபசில் சொத்தின் மேல்புற தென்வடல் எல்கையில் கட்டியுள்ள கட்டிடம், வாசல் மற்றும் கதவு ஆகியவற்றினை அப்புறப்படுத்தக் கோரி செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி மனுதாரர்களால் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வழக்கிடைக் காலத்தில் 1ம் வாதி 09.05.2022ம் தேதி இறந்துவிட்டார். 1ம் வாதியின் இறப்பு பதிவு செய்யப்பட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 05.07.2022ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு 06.08.2022ம் தேதி எழுவினாக்கள் வனையப்பட்டு 14.02.2023ம் தேதி 2ம் மனுதாரர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.1ன் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா ஏற்படுத்தப்பட்ட நிலையில், ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்யப்பட்ட இடை நிலை மனு எண்.6/23ல் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு 04.09.2025ம் தேதி ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார்.

8. இதனையடுத்து, வா.சா.1ன் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் வழக்குரையினை திருத்தம் செய்யக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் 8.5 செண்ட் சொத்திற்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரியிருந்த மனுதாரர்கள் இம்மனுவின் வாயிலாக மேற்படி கோரிக்கையினை 8 செண்டாக குறைத்துள்ளனர். சீர்திருத்த விபரத்தில் தென்வடல் மேல்தலை 82 அடி, கீழ்தலை 77.5 அடி, கிழமேல் வடதலை 44.5 அடி, தென்தலை 43 அடி என்று அந்த ஆவணத்தின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டது என்று சொல்லப்படவில்லை எனவும், புல



HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.12.19 17:28:42 +0530

எண்கள்.30/2D2, 30/2E, 30/2F எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இடம் என்றும் காலதாமதப்படுத்தும் நோக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

9. இடைநிலை மனு எண்.6/23 ல் ஆணையர் கடந்த 04.09.2025 ம் தேதி அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். அதற்கு மனுதாரர்கள் தரப்பில் 18.09.2025 ம் தேதி ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கடுத்த 2 வது வாய்தாவில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, காலதாமதமாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறுவது ஏற்புடையதல்ல. புல எண்கள்.30/2D2, 30/2E, 30/2F எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டதா? அல்லது மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டதா? என்பதை சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் விசாரணையின் முடிவில் தான் தீர்வு காண இயலும். இம்மனுவில் அது குறித்து தீர்வு காண இயலாது.

10. மனுவில் தாவா சொத்தானது 8.5 செண்ட் விஸ்தீரணத்தில் கிரையம் வாங்கப்பட்டதாகவும், அளந்து பார்க்கும் போது 8 செண்ட் மட்டுமே உள்ளதாகவும் அதனைப் பொறுத்து பரிகாரம் வழங்கினால் போதுமானது என்று சொல்லப்பட்டுள்ளது. தாவா சொத்தின் விஸ்தீரணம் 8.5 செண்டா? அல்லது 8 செண்டா? வாதி குறிப்பிடும் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் சரிதானா? அல்லது இல்லையா? தாவா சொத்து புல எண்கள்.30/2D2, 30/2E, 30/2F ல் உள்ளதா? அல்லது இல்லையா? என்பது குறித்து இம்மனுவில் தீர்மானிக்க இயலாது. அசல் வழக்கில் தான் அது குறித்து தீர்மானிக்க இயலும்.

11. மனுதாரர்கள் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்களை முன்னமே அசல் வழக்கு தாக்கல் செய்த போதே கூறி தாக்கல் செய்திருந்தால் அது குறித்து விசாரணையில் முடிவில் தான் பரிசீலிக்க முடியும். ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டதை தொடர்ந்து வழக்குரையினை திருத்தம் செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தினைத் தொடர்ந்து வழக்குரையினை திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டும் என்று குறிப்பிட்டால் தான் மனுவினை அனுமதிக்க வேண்டும் என்று கூறுவது ஏற்புடையதாகாது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.12.19 17:28:54 +0530

12. சொத்தினை அளந்து பார்த்ததின் அடிப்படையில் வழக்குரையினை திருத்தம் செய்யக் கோருவதாக கூறியுள்ளது ஏற்புடையது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவினை அனுமதிப்பதினால் அசல் வழக்கில் உபயதரப்பினர்களிடையே எழுந்துள்ள பிரச்சனையினை அறுதியாகவும், இறுதியாகவும் தீர்மானிக்க இயலும். வழக்குரையில் நான்குமால்களை திருத்தம் செய்யக் கோரவில்லை. இம்மனுவினை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரருக்கு யாதொரு பாதகமும் ஏற்படாது. இத்தகு சூழ்நிலையில், இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**13.முடிவாக,**

**இம்மனு செலவுத் தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துப்பார்த்து பிழைத்திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 19.12.2025 அன்று உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.12.19 17:29:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் – இல்லை –

மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் –இல்லை

எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் –இல்லை–

எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் -இல்லை

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.12.19 17:29:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.